தமிழ்ப் பல்கலைக்கழகச்

செய்தி மலர்

திருவள்ளுவராண்டு 2034 நவம்பர் 2003

இந்திய மொழிகள் பள்ளி — புத்தொளிப் பயிற்சி

இந்திய மொழிகள் பள்ளியின் சார்பில் நடைபெற்ற புத்தொளிப் பயிற்சியின் நிறைவு விழா 05.11.2003 அன்று நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பில் தமிழகத்தின் பல்வேறு பல்கலைக்கழகங்களிலிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் பல்துறைப் பேராசிரியர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றார்கள். முனைவர் வே.சா.அருள்ராஜ் வரவேற்றார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையுரை ஆற்றினார். அவர்தம் உரையில் இந்திய இலக்கணம் மற்றும் இலக்கிய மரபுகள் எவ்வாறு வளர்ந்து வந்துகொண்டிருக்கின்றன என்பதையும் இந்திய இலக்கியங்கள் குறிப்பாகக் கவிதை இலக்கியம் பற்றியும் உரையாற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ச.அகத்தியலிங்கம் மையக் கருத்துரை வழங்கினார்கள். அவர்தம் உரையில், 'இந்தியாவில் 1983ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 1500 மொழிகள் பேசப்படுவதாக அறியவருகிறது. இவற்றில் பழமையான மொழி சமஸ்கிருத மொழியும், தமிழ் மொழியுமாகும். விண்ட்ஸ்ரோ என்ற அறிஞர் தமிழ்மொழியைப் பற்றிக் கூறும்போது வாழுகின்ற மொழியென்றும், வளர்கின்ற மொழியென்றும் கூறுகிறார். மேலும் அவர் ஆங்கில மொழியோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற மொழியாகத் தமிழ்மொழி விளங்குகிறது என்கிறார். ஆதிகாலத்தில் 400க்கும் மேற்பட்ட புலவர்களைக் கொண்ட ஒரேமொழி தமிழ்மொழியாகும். தொல்காப்பிய காலம் முதல் சிலப்பதிகாரம் வரை உள்ள காலத்தைச் செவ்வியல் காலமாகக் கொள்ளலாம்' எனக் கூறினார். முனைவர் இரா.முரளிதரன் நன்றி கூறினார்.

முனைவர் வே.சா.அருள்ராஜ்

பேரறிஞர் பவானந்தர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு

பேரறிஞர் பவானந்தர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு நூலகத்தின் சார்பில் 06.11.2003 அன்று நடைபெற்றது. முனைவர் பா.சுந்தரேசன் வரவேற்றார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி தலைமையுரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் திருக்குறள் போன்ற பண்டைத் தமிழ் நூல்களில் நூல் பற்றிய செய்திகள் இடம் பெற்றிருத்தலையும், அன்று முதல் இன்றுவரை தகவல்களைப் பெறக்கூடிய தளமாக நூலகம் விளங்கி வருவதையும், இணைய தளம் அமைவதற்கு அடித்தளமாக நூலகம் இருக்கின்றது என்றும் கூறினார். திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியின் நூலக அறிவியல் துறைத் தலைவரும், பேராசிரியையுமான திருமதி சா.அல்லி சொர்ணம் அவர்கள் நூலகமும் மனித உறவுகளும் என்ற தலைப்பில் தனி வாழ்விலும், பொதுவாழ்விலும் நூலகத்திற்கு உள்ளும் வெளியும் மனிதர்களுக்கிடையே ஏற்படுகின்ற கருத்துப் பரிமாற்றச் சிக்கல்கள் பற்றியும் அவைகளை எப்படியெல்லாம் எதிர்கொண்டு சீரமைப்பது என்பதையும் எடுத்துரைத்தார். சி.மகாராசன் நன்றி கூறினார்.

தொடக்க விழா

தமிழ்ப் பல்கலைக்கழக நாடகத்துறை சார்பில், பழந்தமிழ் இலக்கியங்களை நாடக வடிவமாக்குதல் என்னும் பொருண்மையில் நடைபெறும் புத்தொளிப் பயிற்சியின் தொடக்கவிழா 06.11.2003 துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அனைவரையும் முனைவர் க.இரவீந்திரன் வரவேற்றார். விழாவில் தலைமையுரையாற்றிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் பழந்தமிழ் இலக்கியங்களை நாடக வடிவமாக்குதல் என்னும் அரியதொரு பொருண்மை, ஆசிரியர்களைப் பல்கலை வித்தகர்களாகப் பரிணமிக்கச் செய்யும் வல்லமை பெற்றது என்பதை உலகளாவிய வரலாற்று நிகழ்வுகளோடும், நாடகக் கோட்பாட்டு விளக்கங்களோடும் நிறுவி, நல்ல நாடகங்கள் சமுதாயச் சீர்திருத்தத்திற்கு ஆற்றியுள்ள பங்களிப்பினைப் படம்பிடித்துக் காட்டினார். கலைமாமணி பேராசிரியர் ஆறு. அழகப்பன் அவர்கள் மைய உரை ஆற்றினார். பழந்தமிழ் இலக்கியங்களில் நாடகக் களங்களை விளக்கி அவை நாடகமாக்கப்படவேண்டிய சிறப்பு குறித்தும் விளக்கினார். வாழ்த்துரை வழங்கிய கலைமாமணி பேராசிரியர் இரா.குமாரவேலன் தமிழ் நாடகத்தின் தொன்மைச் சிறப்பை விளக்கினார். தமிழகத்தில் பல பகுதிகளிலிருந்தும் 28 கல்லூரி ஆசிரியர்கள் பங்கேற்றனர். பல்துறை அறிஞர்கள், நாடக அறிஞர்கள் மற்றும் கலைஞர்கள் பங்கேற்றுப் பல பொருண்மைகளில் உரையாற்றவும், செயல் விளக்கம் தரவும் ஏதுவாகப் பழந்தமிழ் இலக்கியங்கள், கோட்பாடுகள், நாடக வடிவமாக்கல் கூறுகள், உத்திகள், நாடகப் படைப்பு என முறையாக வகுப்புகள் நெறிப்படுத்தப்பட்டுள்ளமையைப் பயிற்சி இயக்குநர் விளக்கினார். முனைவர் பட்ட ஆய்வாளர் பேரா.இரா.கிராவிடராணி நன்றி கூறினார்.

புத்தொளிப் பயிற்சி

புத்தொளிப் பயிற்சியின் நிறைவு விழா 26.11.2003 அன்று நடைபெற்றது. துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமை வகித்தார்கள். கலைமாமணி டி.கே.எஸ். கலைவாணன் மற்றும் டி.கே.எஸ்.புகழேந்தி ஆகியோர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்கள். துணைவேந்தர் அவர்கள் தமது நிறைவுரையில் இப்புத்தொளிப் பயிற்சியின் மூலமாகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், நாடக அறிவு பெற்றதோடு நல்ல படைப்பாளிகளாகவும், நடிகர்களாகவும், இயக்குநர்களாகவும் பரிணமித்த நிலைக்குப் பாராட்டு தெரிவித்தார்கள். எக்காலத்திற்கும் பொருந்தும் அரிய களங்களைப் பழந்தமிழ் இலக்கியங்கள் கொண்டுள்ளதால் அவை நாடக வடிவம் பெற்றால் மிகப்பெரிய பயன் விளையும் என்றும் குறிப்பிட்டார்கள். வாழ்த்துரை வழங்கிய கலைமாமணி டி.கே.எஸ்.கலைவாணன் அவர்கள் திரைப்பட நடிகர்கள் நாடகக் கலைக்கும் உரிய பங்களிப்பை நல்க வேண்டுமென வலியுறுத்தியதோடு, தமது தந்தையார் அவ்வை டி.கே.சண்முகம் அவர்கள், கல்லூரிகளில் நாடகம் பயிற்சிப் பாடமாக அமையவேண்டுமெனக் கொண்டிருந்த ஆவலை இப்புத்தொளிப் பயிற்சி மூலமாகத் தமிழ்ப் பல்கலைக்கழக நாடகத்துறை நிறைவு செய்திருப்பதை மகிழ்வோடு பாராட்டினார். பயிற்சி ஆசிரியர்கள் மேடையேற்றிய புத்தொளி நாடகங்கள் என்ற நாடகங்களின் நூல் தொகுப்பினைத் துணைவேந்தர் அவர்கள் வெளியிட அதனைக் கலைமாமணி டி.கே.எஸ்.கலைவாணன் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். சங்கரதாச சுவாமிகள், அவ்வை சண்முகம் ஆகியோரின் திருவுருவப் படங்களையும் துணைவேந்தர் அவர்கள் திறந்து வைத்தார்கள். முனைவர் க.இரவீந்திரன் வரவேற்புரையும், க.வெங்கடரமணன் நன்றியும் கூறினர்.

நாடக விழா

புத்தொளிப்பயிற்சி ஆசிரியர்கள், தங்கள் பயிற்சியின்போது பெற்ற அனுபவங்களின் மூலமாக இலக்கியக் களங்களிலிருந்து நாடக வடிவமாக்கிய நான்கு நாடகங்களை 25.11.2003 அன்று சிறப்பாக நடத்திக் காட்டினார்கள். 'பெயர் அற்றவள்' (மூலம்: பெரியபுராணம்), 'தீ' (மூலம்: புறநானூறு), 'சூர்ப்பனகை' (மூலம்: இராமாயணம்), 'தெய்வத் தீர்ப்பு' (மூலம்: திருக்குறள்) என்ற நாடகங்களையும் நடத்திக் காட்டினார்கள். இந்நாடகங்களைப் பார்த்த கலைமாமணி டி.கே.எஸ்.கலைவாணன் மற்றும் பாண்டிச்சேரிப் பல்கலைக்கழக நாடகத்துறைப் பேராசிரியர் முனைவர் ஆறுமுகம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள்.

-முனைவர் க.இரவீந்திரன், நாடகத்துறை

King Raja Raja Cholan a role model

Achievements of the King Raja Raja Cholan, who had built the Big Temple here, are so varied and unique that he remains a wonder among ancient kings, said E.Sundaramurthy, Vice-Chancellor, Tamil University.

Speaking at the Sadhaya Vizha (birth anniversary celebrations of the king), he said the king had imagined everything big and achieved them. One example was the Big Temple, which is big in every aspect - big vimana, big Linga and big Nandhi.

Temple remained the centre of administration providing employment to hundreds of people. The king treated Tamil Othuvars and Sanskrit pandits, who worked in the temple, equally and paid equal wages.

When he was young, he got an opportunity to ascend the throne but he gave it to his uncle who wanted to occupy the throne. He ascended the throne only later. Such was the magnanimity of the King, he said.

-The Hindu, Nov.2,2003

இலக்கியத்துறை முதுகலை மாணவரின் கவிதைக்குப் பரிசு

கேரள மாநிலம் திருவனந்தபுரத்திலுள்ள, கவியரசர் கண்ணதாசன் நினைவுக் கழகம் நடத்திய கவிதைப் போட்டியில் இலக்கியத்துறை முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவர் க.மணிகண்டன் மூன்றாம் பரிசைப் பெற்றார். கவிஞர் கண்ணதாசன் நினைவுக் கழகம் சார்பில் 29.11.2003 சனிக்கிழமை நடைபெற்ற ஆறாம் தேசியக் கருத்தரங்கு நிகழ்ச்சியின்போது இப்பரிசு மணிகண்டனுக்கு நேரில் வழங்கப்பெற்றது.

-முனைவர் து.சீனிச்சாமி, இலக்கியத்துறை

நவம்பர் '03 இல் நடைபெற்ற நிகழ்வுகள்

03.11.2003 - சிற்பத்துறை - புத்தொளிப்பயிற்சி - தொடக்கவிழா

04.11.2C03 - நூலகக் குழுக்கூட்டம்

05.11.2003 - இந்திய மொழிகள் பள்ளி - புத்தொளிப்பயிற்சி நிறைவு விழா

06.11.2003 - நாடகத்துறை - புத்தொளிப்பயிற்சி - தொடக்கவிழா

14.11.2003 - தத்துவ மையம் - உலக நீரிழிவு நாள் விழிப்புணர்வு - மருத்துவசோதனை

11.11.2003 - கட்டடக்குழுக் கூட்டம்

24.11.2003 - நாடகத்துறை - புத்தொளிப்பயிற்சி நிறைவு விழா

முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு

ஆய்வாளர் பெயர்/துறை	தலைப்பு	வாய்மொழித்தேர்வு நடைபெற்ற நாள்
1. இரா. பாரதி மொழிபெயர்ப்புத்துறை	"English to Tamil Translation" An Evoluation (ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பு- ஓர் ஆய்வு)	17-11-2003
2. ஜெ.இராஜேந்திரன் கட்டடக்கலைத்துறை	தொண்டை மண்டல கோயில் விமானங்கள் ஓர் ஆய்வு (கலை மற்றும் கட்டுமானப் பொறியியல் தொழில்நுட்பம்)	27-11-2003
3. ப.பத்மநாபன் அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித்துறை	பிரெஞ்சிந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் இதழ்களின் பங்கு (1947-1954)	28-11-2003

-தமிழ்ப் பல்கலைக்கழகத் தேர்வுப்பிரிவு

இ.அ.ப. மட்டும் நூலஞ்சல்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

திரு. பெருமாள் அவர்கள்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

அருங்காட்சியகம்



தமிழகம் உலகப் பண்பாட்டின் தொட்டில் என்பர் வரலாற்று அறிஞர். இரண்டாயிரம் ஆண்டுகளாக இடையறாத நாகரிகத் தொன்மையைப் பெற்ற பெருமை தமிழ் மக்களைச் சாரும். தமிழரின் நாகரிகம் பண்பாட்டைப் போன்று அவர்தம் மொழியும் உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இத்தகைய பழமையான பண்பாட்டையும், பெருமை பெற்ற பாரமபரியத்தையும் வெளியுலகிற்குக் காட்டும் வண்ணம் 1982ஆம் ஆண்டு மேத் திங்களில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அரண்மனை வளாகத்தில் இவ்வருங்காட்சியகம் தொடங்கப்பட்டது.

நோக்கம்: அழிந்து வரும் தமிழ்க்கலை மற்றும் பண்பாட்டினைப் பாதுகாக்கும் வண்ணம் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் தமிழர் கலை மற்றும் பண்பாடு தொடர்பான பொருள்கள், திருவிழா, இசை நடனம் போன்றவற்றைச் சேகரித்துப் பாதுகாப்பதும், அவைகளைப் பற்றிய ஆய்வு செய்வதும், அழிந்து வரும் தமிழ்க்கலை மற்றும் பண்பாட்டின் சிறப்பைப் பொதுமக்களுக்கு உணர்த்தும் வண்ணம் சேகரித்த பொருட்களைக காட்சிப்படுத்திக் கல்விப்பணி ஆற்றுவதும் அருங்காட்சியகத்தின் நோக்கங்களாகும். அருங்காட்சியகங்கள் பழம்பொருள்களின் இருப்பு அறை (store room) என்ற நிலைமாறித் தற்போது அருங்காட்சியகங்கள் அனைத்துத் துறைகளையும் தன்கைத்தே கொண்ட, மக்களுக்குக் கல்விப் பணியாற்றுவதை முதன்மையான குறிக்கோளாகக் கொண்ட நிறுவனமாக வளர்ச்சி பெற்றுச் செயல்பட்டு வருகின்றன. களப்பணி, அன்பளிப்பு, அகழாய்வு மற்றும் விலைக்கு வாங்குதல் மூலமாக இதுவரை ஏறக்குறைய 3000 பொருட்கள் தமிழ்ப் பல்கலைக்கழக அருங் காட்சியகத்திற்காகச் சேகரிக்கப்பட்டுள்ளன. இவை கற்காலம் முதற்கொண்டு தற்காலம் வரையிலான கால அளவைக் கொண்டவை. சேகரிக்கப்பட்ட பொருள்கள் அவற்றின் தன்மைக்கேற்பப் பிரிக்கப்பட்டுப் பல்வேறு கூடங்களாக அமைக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அவை தொல்லியல், கல்வெட்டியல, நாணயவியல், சிற்பங்கள், ஆயுதங்கள், நாட்டுப்புறக்கலைகள், வீட்டுப்பொருள்கள், இசைக்கருவிகள், சமகாலக்கலை, வேளாண்கருவிகள்.

பார்வை நேரம்:
காலை 10.00 முதல் 1.00 மணிவரை
மாலை 2.00 முதல் 5.00 மணிவரை
விடுமுறை:
தமிழ்ப் பல்கலைக்கழக அனைத்து விடுமுறை நாட்கள்.

அரும்பொருள் பாதுகாப்பு: சேகரிக்கப்படும் அரும்பொருள்கள் உரியமுறையில் வேதியல் பொருள்களைக் கொண்டு சுத்தம் செய்யப்பட்டுப் பாதுகாக்கபடுகின்றன. இதற்கான வேதியல்கூடம் 1998ஆம் ஆண்டு முறையாக அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

கல்விப்பணிகள்: அருங்காட்சியகத்தைப் பார்வையிட வரும் பார்வையாளர்களுக்குப் பொருள்களைப் பற்றியும், கூடங்களைப் பற்றியும் விளக்கம் அளிக்கப்படுகிறது. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்க்குச் சிறப்பு விளக்கவுரைகள் ஆற்றப்படுகின்றன. மேலும் மாணவர்கள் மற்றும் ஆய்வாளரகளுக்காக அருங்காட்சியக நூலகம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

-கு.தேவராஜ், அருங்காட்சியகப் பொறுப்பாளர்

"பண்பாய் இதனைப் பேணிக் காப்போர்
பொன்னடி இரண்டும் எம்தலை மேலன"
-முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம்